தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 6

# விடைகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. த, தா, தி...... என்ற எழுத்துகள்

அ) உயிரெழுத்து ஆ) மெய்யெழுத்து

இ) உயிர்மெய்யெழுத்து ஈ) முதலெழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

2. தமிழரின் புத்தாண்டு நாள் தை

அ) இரண்டாம் நாள் ஆ) முதலாம் நாள்

இ) நான்காம் நாள் ஈ) மூன்றாம் நாள்

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

3. குளம் என்பது

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) ஒன்றன்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

4. **பழமொழி :** குப்பையில் கிடந்தாலும் ____________________ மங்காது.

அ) முத்து ஆ) பவளம் இ) குன்றிமணி ஈ) தங்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

5. ____________________ நீச்சல் குளத்திற்குச் சென்று நீந்தினோம்.

அ) நீ ஆ) அவன் இ) நான் ஈ) நாங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

6. வேளாண்மை என்ற சொல் குறிப்பது

அ) மீன்பிடித்தொழிலை ஆ) உழவுத்தொழிலை

இ) கைத்தொழிலை ஈ) ஆசிரியத் தொழிலை

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை

7. நடத்தல் என்பது

அ) காலப்பெயர் ஆ) இடப்பெயர்

இ) தொழிற்பெயர் ஈ) சினைப்பெயர்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

8. இடப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வட்டம் ஆ) விளையாட்டுத்திடல்

இ) இனிப்பு ஈ) கண்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

9. சர்வதேச நெல்சன் மண்டேலா நாளாக ஐ.நா அறிவித்த நாள்

அ) ஏப்பிரல் - 18 ஆ) யூலை - 18

இ) மே - 18 ஈ) யூன் - 18

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

10. வாழ்கின்றனர் என்பது

அ) இறந்தகாலம் ஆ) எதிர்காலம்

இ) நிகழ்காலம் ஈ) முடிந்தகாலம்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

11. முதலெழுத்துகள்

அ) 18 ஆ) 30 இ) 247 ஈ) 12

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

12. அது என்ற சொல்லுடன் ஐ என்ற எழுத்தைச் சேர்த்தால் வருவது

அ) அதனை ஆ) அவற்றை

இ) அதை ஈ) அதைய்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை

13. படர்க்கை என்ற இடத்தைக் குறிக்கும் சொல்

அ) வந்தோம் ஆ) வந்தான் இ) வந்தாய் ஈ) வந்தீர்கள்

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

14. உள்ளத்தில் இருந்து வெளிப்படும் இயல்புகளை ______________ என்பர்.

அ) நாகரிகம் ஆ) ஒழுக்கம் இ) பண்பாடு ஈ) விழுப்பம்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

15. சுட்டாலும் வெண்மை தருவது

அ) சங்கு ஆ) கல் இ) பொன் ஈ) வெள்ளி

அ) ■ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. காலம் ______________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

17. எல்லாள மன்னன் வெற்றி கொண்டது

அ) குத்திகனை ஆ) அசேலனை

இ) துட்டகெமுனுவை ஈ) தேவநம்பியதீசனை

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

18. பின்வருவனவற்றுள் மெல்லின எழுத்து

அ) ர் ஆ) க் இ) ம் ஈ) ய்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

19. யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னன்

அ) இராவணன் ஆ) எல்லாளன்

இ) பண்டாரவன்னியன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

20. முதிரை மலைப்பகுதியை ஆண்ட குறுநில மன்னன்

அ) சேனன் ஆ) இரும்பொறை இ) குமணன் ஈ) அசேலன்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

21. மாலை வேளை பறவைகள் கூட்டை நோக்கிப் பறந்தன.

இதில் பறந்தன என்ற சொல்

அ) எழுவாய் ஆ) பயனிலை

இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

22. எல்லாளனின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் தலைநகரமாக இருந்தது

அ) கொழும்பு ஆ) கண்டி இ) அநுராதபுரம் ஈ) உரோகண

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

23. நல்லூர்க்கந்தசுவாமி கோயில் காணப்படுவது

அ) யாழ்ப்பாணத்தில் ஆ) மன்னாரில்

இ) மட்டக்களப்பில் ஈ) திருகோணமலையில்

அ) ■ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. "நன்று நன்று தம்பியே நாங்கள் பறந்து செல்லுவோம்".

என்று கூறியவை

அ) புறாக்கள் ஆ) கொக்குகள் இ) கிளிகள் ஈ) நாரைகள்

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

25. உயிரை விட மேலானது என வள்ளுவர் கூறுவது

அ) பணத்தை ஆ) செல்வத்தை இ) ஒழுக்கத்தை ஈ) அறிவை

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

26. பூவாதே காய்க்கும் எனத்தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்

அ) நாலடியார் ஆ) நல்வழி இ) நன்னூல் ஈ) மூதுரை

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

27. பட்டி பெருக வேண்டும் தம்பிரானே எனத்தொடங்கும் பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ஆ) கும்மிப்பாடல்

இ) ஏர்ப்பாடல் ஈ) மீன்பிடிப்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

28. மகிழ்ச்சி என்ற பொருள் தரும் வேறு சொல்

அ) புகழ்ச்சி ஆ) இகழ்ச்சி இ) உயர்ச்சி ஈ) உவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

29. ஒழுக்கத்தால் சிறந்தவர்களை ________________ என்பர்.

அ) முதியோர் ஆ) அறிஞர் இ) சான்றோர் ஈ) சிறியோர்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

30. போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்ட ஆண்டு

அ) 1619 ஆ) 1519 இ) 1719 ஈ) 1819

அ) ■ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

| |
|---|
| *விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடப்பட்டிருந்தால் ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி.* |

புள்ளிகள் 30

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

கூழானாலும் குளித்துக்குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பன நம் முன்னோர் கூறியுள்ள பழமொழிகள். நாம் எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதையே இவை எமக்கு உணர்த்துகின்றன. நாம் வேலை செய்கின்றோம் . விளையாடுகின்றோம் அப்பொழுது எமது உடல் வியர்க்கிறது. அவ்வியர்வை காய்ந்து அழுக்காக உடலில் தங்குகிறது. அதனால் நாம் நாள்தோறும் குளித்து உடலைத்தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். இரவு உறங்க முன்னரும் காலை எழுந்ததும் பல் துலக்குதல் வேண்டும். நகங்களை வெட்டித் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். நாம் எமது உடைகளை நன்கு துவைத்து அழுக்கைப் போக்க வேண்டும். ஏனெனில் அழுக்கான உடைகளை அணிந்தால் எமக்கு நோய்கள் உண்டாகும். நாம் உண்ணும் உணவும் பருகும் நீரும் தூய்மையாக இருத்தல் வேண்டும். எனவே நாம் எப்பொழுதும் தூய்மையைப் பேண வேண்டும்.

1. இங்கு கூறப்பட்டுள்ள பழமொழிகள் எவை?

   *கூழானாலும் குளித்துக் குடி . கந்தையானாலும் கசக்கிக் கட்டு.*

2. நாம் எவ்வெவ் வேளைகளில் பல் துலக்க வேண்டும்?

   *நாம் காலையிலும் இரவு உறங்க முன்னரும் பல் துலக்க வேண்டும் .*

3. எமது உடல் எப்பொழுது வியர்க்கின்றது?

   *எமது உடல் வேலை செய்யும்போதும் விளையாடும்போதும் வியக்கிறது .*

4. எவற்றை அணிந்தால் எமக்கு நோய்கள் உண்டாகும் எனக் கூறப்படுகின்றது?

   அழுக்கான உடைகளை அணிந்தால் எமக்கு நோய்கள் உண்டாகும் எனக் கூறப்படுகின்றது .

5. நாம் எப்பொழுதும் எதைப் பேண வேண்டும்?

   *நாம் எப்பொழுதும் தூய்மையைப் பேண வேண்டும் .*

*ஒவ்வொரு முழுவிடைக்கும் 02 புள்ளிகள்.*

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. எல்லாளனுடன் போர் தொடுக்க வேண்டாம் என்று துட்டகெமுனுவைத் தடுத்தவன் யார்?

   **காகவனத்தீசன்**

2. தாயகத்தில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் எது?

   **திருகோணமலை**

3. சிங்கள அரசுகளுக்கிடையில் குழப்பங்களை உருவாக்கி அரசியலுக்குள் நுழைந்த ஐரோப்பியர் யார்?

   **போர்த்துக்கேயர்**

4. செவி வழியாகப் பாடப்பட்டு வரும் பாடல்கள் எவை?

   **நாட்டார் பாடல்கள் (நாட்டுப்புறப் பாடல்கள்)**

5. தமிழ் மக்களிடம் இருந்து சிங்கள அரசினால் பறிக்கப்பட்ட உரிமைகள் எவை?

   **குடியுரிமை, மொழியுரிமை, வாழ்வுரிமை, கல்வியுரிமை**

6. ***பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்***

   ***பேரா விடும்பை தரும்***

   இக் குறளின் பொருளைத் தருக.

   **பெரியோரது சொல்லைக் கேட்காவிட்டால் பெரியோரால் பெரிதும் துன்பப்படுவர்.**

7. பழங்கால மக்கள் எங்கே வாழ்ந்தனர்?

   **குகைகளிலும் மரப்பொந்துகளிலும்**

| |
|---|
| *விடைகள் ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள். ஏழு வினாக்களில் ஏதாவது ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதியிருக்க வேண்டும். ஏழு வினாக்களுக்கும் விடைகள் எழுதியிருந்தால் முதல் ஐந்து வினாக்களுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்க வேண்டும்.* |

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கவிதையை முழுமையாக்குக.**

## கடமை

| | | | | |
|---|---|---|---|---|
| புரிந்தோர் | உலகில் | கற்று | தாய் | பெற்ற |

*அல்லும் பகலும் நல்ல*
*ஆசையோடு நீங்கள்*
*கல்வி* **கற்று** *நன்மை*
*கருதி வாழ வேண்டும்*

*பலவும் படித்து நீங்கள்*
*பட்டம்* **பெற்ற** *போதும்*
*உலகத்தோடும் ஒத்தே*
*ஒழுகிக் கொள்ள வேண்டும்*

*இந்த* **உலகில்** *நீங்கள்*
*இயற்றும் தொண்டில் எல்லாம்*
*தந்தை* **தாய்** *பேணும்*
*தகுதி ஒன்றே பெரிது*

*கன்றை நினைந்தே உள்ளம்*
*கசியும் ஆவைப் போல*
*நன்றி* **புரிந்தோர்** *தம்மை*
*நாளும் நினைக்க வேண்டும்*

பொருத்தமான ஒவ்வொரு நிரப்பலுக்கும் 02 புள்ளிகள்.
(விடையில் எழுத்துப்பிழையிருப்பின் புள்ளிகள் இல்லை)

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் பன்மைச் சொல்லியங்களை ஒருமைச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

அ) நண்பர்கள் கடலில் நீந்தி விளையாடினர்.

**நண்பன் கடலில் நீந்தி விளையாடினான்.**

ஆ) பெண்கள் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து எடுக்கின்றனர்.

**பெண் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து எடுக்கின்றாள்.**

2. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

**3 /மூன்று**

இடையின மெய்யெழுத்துகளைத் தருக.

**ய் ர் ல் வ் ழ் ள்**

3. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

அ) ஈகை :- **கொடை**

ஆ) மேழி :- **கலப்பை**

இ) வள்ளல் :- **கொடையாளி**

4. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

ஆண்பால் :- **மாணவன், வந்தான்**

பலர்பால் :- **மாணவர்கள், வந்தார்கள்**

பலவின்பால் :- **பந்துகள், கூவின**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

உறவினர் :- **நாம் உறவினரோடு சேர்ந்து வாழ வேண்டும்.**

மானம் :- **நாம் உயிரினும் மேலாக மானத்தைப் போற்ற வேண்டும்.**

**( இவ்வாறான பொருத்தமான விடைகள் )** புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

ஒரு நாள் எனது பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. நான் ஓட்டப் போட்டியில் பங்குபற்றினேன். இப்போட்டியில் நான் முதலாம் இடத்தைப் பெற்றேன். அதற்காக எனக்குப் பரிசு கிடைத்தது. பெற்றோரும் நண்பரும் என்னைப் பாராட்டினர். நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

***கருத்து மாறாத சரியான மொழி பெயர்ப்புக்கு 05 புள்ளிகள்.***
***எழுத்துப்பிழையை கருத்தில் கொள்ளவும்.***

புள்ளிகள் 05



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் பண்பாடு
- ✸ கோடைகாலம்
- ✸ எனது வாழிடப்பள்ளி

புள்ளிகள் 20

www.tamiledc.com

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை